www.tamilarangam.net

# அரசியல் அதிர்வேட்டுக்கள்

திரு. அமிர்தலிங்கம்: 'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்குமென்றும், இங்குள்ள நீதிமன்றங்களின் மொழி தமிழ் என்றும், மேல்முறையீடு செய்யப்படும்போது மட்டுமே தமிழ்—சிங்களம் ஆகியமொழிகள் பயன் படுத்தப்படவேண்டுமென்றும் அரசியல் சட்டம் கூறுகிறது. அப்படி இருக்கையில் இப்போது புதிதாக சிருஷ்டிக்கப்படும் மாவட்டத்தில் எந்த மொழி நிர்வாக மொழியாக இருக்கும்?'

அரசாங்க எம். பி.க்கள் 'சிங்களம் தான்'

திரு. அமிர்தலிங்கம்: 'இந்த உண்மையைக் கூறியதற்கு நன்றி.'

பதில் பொது நிருவாக அமைச்சர்: 'நாடுமுழுவதும் சிங்களம் தான் ஆட்சிமொழி. தமிழ் மொழி நியாயமான அளவு உபயோகிக்கப்படும். நீங்கள் அரசியல் சட்டத்தை தவருக விமர்சனம் செய்கிறீர்கள்.'

திரு. மு. சிவசிதம்பரம்: 'வடக்கு, கிழக்கில் தமிழ்மொழி தான் நிருவாக மொழி என்று அரசியல் சட்டம் கூறுகிறது.'

பதில் அமைச்சர்: 'இல்லை. புதிய நிருவாக மாவட்டத்தில் சிங்களம் தான் நிருவாக மொழி.'

திரு. அமிர்தலிங்கம்: 'நன்றி. அரசியல் சட்டத்தில் தமிழ்

(4ம் பக்கம் பார்க்க)

## அரசியல் அதிர்.....

(முன்பக்கத் தொடர்ச்சி)

மொழிக்கு நீங்கள் கொடுத்துள்ள உரிமை இதுதான் என்பதை விளக்கிவிட்டீர்கள். இப்போது கொண்டுவந்துள்ள பிரேரணை தமிழ்மொழி உபயோகத்திற்கு தமிழ்ப்பகுதிகளில் அடிக்கப்படும் சாவுமணி என்பதை மேலே கலரியில் இருப்பவர்கள் உணர்ந்து கொள்வார்களென நம்புகிறேன்.'

சபாநாயகர்: 'மேலே கலரியில் இருப்பவர்கள் பற்றி இங்கு பிரஸ்தாபிக்க வேண்டாம்.'

திரு. அமிர்தலிங்கம்: 'நீங்கள் கூறினால் நான் பிரஸ்தாபிக்கவில்லை. தமிழ் மொழி உரிமைகளை வழங்கிவிட்டதாக் கூறும் அரசாங்கம் உண்மையில் என்ன செய்கிறது என்பதை உலகம் அறிய வேண்டும் என்பதற்காகக் கூறினேன். நாளை மாகாணங்களின் எல்லைகளைக்கூடமாற்ற தீர்மானம்கொண்டு வரக்கூடும்.'

அரசாங்க எம். பி. க்கள்: 'குருசாமி. குருசாமி.'

(கூச்சல்)

திரு. அமிர்தலிங்கம்: 'சபாநாயகர் அவர்களே. நான் இந்தக் கூச்சல்களுக்கு பயப்படமாட்டேன். அவர்களுடன் இன்று மோதிக்கொள்ள விரும்பவில்லை. எனக்கு முக்கியமான பணி இருக்கிறது.'

அரசாங்க எம். பி. க்கள்: 'டைகர், மேடரர்.'

திரு. அமிர்தலிங்கம்: 'நீங்கள் தான் கொலைஞர்கள். எமது மக்களில் முந்நூறு பேரைக் கொன்றீர்கள்.'

(கூச்சல்)

சபாநாயகர்: 'அமைதி, அமைதி எதிர்க்கட்சித்தலைவரை பேசவிடுங்கள்.'

திரு. அமிர்தலிங்கம்: 'திருமலை மாவட்டத்திலுள்ள மூன்று தொகுதிகளில் கட்டப்பட்ட 15 வீடுகளில் 7வீடுகள் சிங்களவருக்கும் 5 வீடுகள் முஸ்லிம்களுக்கும், 3 வீடு தமிழர்களுக்கும் வழங்கப்பட்டது.'

டாக்டர் ரஞ்சித் அத்தபத்து: 'அப்படியென்றால் 8 வீடுகள் தமிழ்பேசும் மக்களுக்குத்தானே கொடுக்கப்பட்டுள்ளது.'

திரு. அமிர்தலிங்கம்: 'தமிழர்களும் முஸ்லிம்களும் 145,000 பேர். அவர்களுக்கு 8 வீடுகள். 55 ஆயிரம் பேரைக் கொண்ட சிங்களவருக்கு 7 வீடுகள். இதுதான். தார்மீகம்.'

(அரசாங்க எம். பி. க்கள் கூச்சல்)

அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ: 'சிங்களவர்களைப் போன்ற கருணையுள்ளம் கொண்ட இனம் உலகில் எங்குமில்லை. தன்னுடன் போரிட்டு மாண்ட எல்லாளன் என்ற தமிழ் மன்னனுக்கு சிலை எழுப்பினான்சிங்களதுட்டகைமுனு.'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்